# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் இதழ்



## அன்னை

(ஆசிரியர் மாணவர் உரையாட்டு.)

உன்னைக் கொண்டு வந்தே, இவ்
உலகில் விட்டது யார் சொல்
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை! அன்னை! அன்னை!

கண்ணைப் போல உன்னையே
காத்து வருவது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை—என்
அன்னை! அன்னை! அன்னை!

எண்ணெய் இட்ட விளக்குப் போல்
இரவில் காத்தது யார் சொல்?
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை! அன்னை! அன்னை!

உண்ண உண்ணப் பாலையே
ஊட்டிக் கொடுத்தது யார் சொல்?
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை! அன்னை! அன்னை!


கண்ணே! மணியே! என்றுன்னைக்
கட்டிக் கொண்டது யார் சொல்?
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை அன்னை அன்னை

பொன்னே! பூவே! என்றுன்னைப்
போற்றிப் புகழ்ந்தது யார் சொல்?
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை! அன்னை! அன்னை!

உன்னைக் காக்க மருந்துண்டே
உணவை வெறுத்தது யார் சொல்?
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை! அன்னை! அன்னை!

மண்ணில் இன்றும் என்றும் நீ
மறவா திருப்பது யார் சொல்?
அன்னை அன்னை அன்னை—என்
அன்னை அன்னை அன்னை

குரல்: 3.
இசை: 7.



விலை 20 காசு.

# வேண்டும்.

பசிக்கு வேண்டும் சோறு!
பயிர் செழிக்க ஆறு!
வசிக்க நல்ல வீடு!
வாய் மணக்கப் பாடு!

கனி கொடுக்க மரம்!
கொண்டைக்குப் பூச் சரம்!
துணி எடுக்கக் காசு!
தூக்கி முன்னால் வீசு!

பள்ளிக் கூடம் போவேன்!
பாடம் நன்ருய்க் கேட்பேன்!
வெள்ளிப் பணம் பார்ப்பேன்!
வேண்டும் பொருளைச் சேர்ப்பேன்!

---

# அறிவும் பயனும்.

இரும்புத் துண்டு கிடந்தது;
எடுத்து வீசி எறிந்தனர்!
கருமான் ஒருவன் கண்டனன்;
காய்ச்சிக் கத்தி செய்தனன்!

எலும்புத் துண்டு கிடந்தது;
எடுத் தெறிந்து சென்றனர்!
எலும்புக் காரன் கண்டனன்!
எடுத்துப் பிடிகள் செய்தனன்!

தகரம் ஒன்று கிடந்தது;
தூக்கி வீசி எறிந்தனர்!
தகரக் காரன் கண்டனன்;
தகரக் குவளை செய்தனன்!

துரும்பும் நமக்குப் பயன்படும்!
தோன்றும் பொருள்கள் யாவுமே,
அறிவுள் ளார்க்குப் பயன்படும்!
அறிவில் லார்க்குப் பயனில்லை!

---

பாடல்கள்: துரை·மாணிக்கம்

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-3 | தி.பி.-௨௦௦௦ (கும்பம்)பெப்ருவரி, மார்ச்சு--69 | இசை-7.


# எதிர்காலம்-2

தம்பி! மாந்தன் மிகவும் முன்னேறியுள்ளான் என்பது மெய். ஆனால் எதில் முன்னேறியுள்ளான் என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் விளங்கிவிடும். பஞ்சு உடைபோய் பட்டுடை வந்தது. பிறகு அதுவும் போய் நார்உடை வந்தது. பிறகு இதுவும் போய் பளபளப்பான மெல்லிய நெகிழிக்குழம்பால் செய்த உடைகள் வரலாம். ஆனால் இவற்றால் நமக்கு, நம் அறிவுக்கு, மனத்துக்கு என்ன ஊதியம்வந்தது? இத்தகையஉடைகள் போடுவதால் நமக்குநோய்கள் வராமலா போய்விட்டன? நாம் முதுமை எய்தி இறக்காமலா போய்விட்டோம்? இதை விட்டு விடு.

நீ பூசிக்கொள்ளவும் மினுக்கிக் கொள்ளவும் வகைவகையான மணப்பொடிகளும், வண்ணப் பூச்சுகளும் வந்து கடைத்தெருவெல்லாம் நிரம்பி வழிகின்றனவே, இவற்றால்தான் என்ன பயன்? ஒவ்வொருநாளும் இவற்றைப் பயன்படுத்தி என்ன பயன் கண்டாய்?


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,

**தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.**

தம்பி! காசுச் செலவு. பலவகையான புதுப்புது நோய்கள்! அவற்றிற் கான புதுப்புது மருந்துகள்! ஊசிகள்! குளிகைகள்! இவைதாமே பயன்கள். எண்ணிப்பார். இவையா முன்னேற்றம்? இயற்கையாக வாழ்ந்துகொண்டிருக்கும் பறவைகளையும், விலங்குகளையும் பார். அவற்றுக்கு அன்றிருந்து இன்றுவரை இருக்கும் அழகிய பளபளப் பான வண்ணச் சிறகுகளையும் மேனிகளையும் பார். செயற்கையாக நாம் புனைந்து கொள்வதில் தீமைகள்தாம் மிகுதியாக முன்னேறி யுள்ளனவேயன்றி நன்மைகள் மிகுந்துள்ளன என்று உன்னால் கூற முடியுமா? நீ அன்றாடம் பயன்படுத்தும் மிகுந்த மணமுடைய வழலை (சோப்புக்)கட்டிகள் உன் மேனியை எத்துணையளவு பாழடித்து விட் டன. உன் உடல் பளபளப்பு போய்விட்டது! இளமை எழில் மங்கி விட்டது. சொரசொரப்பான வறண்ட பாதையைப்போல் உன் பொன் னுடல் கருகி வனப்பிழந்து விடவில்லையா? உன் முகத்தில் ஒளி இல்லையே! இவையெல்லாம் எப்படி தம்பி முன்னேற்றம் ஆகும்?

புதிது புதிதாக நீ உண்ணும் சுவைமிக்க உணவுகள்தாம் உனக்கு எந்த வகையில் பயன் தந்துவிட்டன? உன் முன்னோர் எத் துணை வலிவு படைத்தவர்களாக இருந்தனர்? அவர்களின் கால்கள் தூண்களைப்போல் எப்படிப் பருத்திருந்தன! அவர்கள் தோள்கள் எவ் வளவு அழகாக மதர்மதர்த்துப் பொங்கி யெழுந்து குன்றுபோல் விளங்கியிருந்தன! உன்னைப்பார். உன் கால்கள் தட்டுக் குச்சியைப் போல்-கொக்கின் கால்களைப்போல் மெலிந்து வலிவற்றுப்போயின. கைகள் கொழகொழத்துப் போய்விட்டன. தோள் சூம்பலுற்று மூங்கில் தண்டைப்போல் நொள நொளத்துப் போய்விட்டன. உன் தலை வழுக்கை! உன் முகம் பொலிவிழந்து விளங்கவில்லையா? உதடுகள் கறுத்து வெடிப்புற்றுத் தோன்றுவது எத்துணை அருவருப்பு! உனக்கு எத்தனை வகையான நோய்கள்! எங்கே தம்பி! உன் முன்னேற்றம்?

தம்பி! நான் கொஞ்சம் காரசாரமாகச் சொன்னாலும் உண்மை இதுதான். ஊர்திகள் பெருகப் பெருக உன் கால்கள் சூம்பிப்போயின. பொறிகள் மிகமிக நீ செயலிழந்து போய்விட்டாய். புனைவும். மேனி மினுக்கலும் மிகுதியாகப் போகப்போக நீ ஆண்மை குறைந்து போனாய். இக்கால் உள்ள பெண்களுக்குப் பெண்மையும் இல்லை; ஆண்களுக்கு ஆண்மையும் இல்லை. அஃதாவது உன் முன்னேற்றம் அத்தனையும் கூட்டிப் பெருக்கிக் கழித்துப் பார்த்தால் நீ உனக்கே

பயன்படாதவன். உன் நாகரிகம் உன்னை அழித்து வருகின்றது. இறுதியில் உன் நாகரிகப் பொருள்களால் இவ்வுலகமே அழிந்து போவது உறுதி!

தம்பி! இவ்வளவு முன்னேற்றம் அடைந்து விட்டதாகப் பீற்றிக் கொள்கிறாய். உன் இழிவைப் போக்கிக் கொண்டாயா? நிலாக்கோளுக்கும், செவ்வாய்க் கோளுக்கும் உன் செலவை நீட்டித்துக் கொண்டதாகக் கூறிக் கொள்கின்றாயே, உன் இனத்தையே நீ தாழ்த்துகின்ற அறியாமையினின்றும் நீ விடுபட்டாயா? அப்பப்பா! கறுப்பன் என்றும் வெள்ளையனென்றும் எத்தனை நிற வேறுபாடு! பார்ப்பான் என்றும் பறையன் என்றும் எத்தனை இன வேறுபாடு! சீச்சீ! நீ விலங்குகளினும் கீழானவன். உன் இழிவுகள் பலப்பல. ஆனால் பெருமை பேசுவது குறையவில்லை.

தம்பி! நாம் முன்னர் கண்ட அருவருப்புலகமும் அச்ச உலகமும் வராமல் நாம் காக்கவேண்டுமானால் முதலில் உண்பதிலும், உடுப்பதிலும், உறைவதிலும் மட்டும் முன்னேற்றம் காண்பது போதும் என்ற கொள்கையை நாம் விட்டுவிட வேண்டும். நமக்கு வாயும் வயிறும் எவ்வளவு முகாமையாயினவோ, அவ்வளவு இன்றியமையாதவை அறிவும் மனமும். அறிவு வளர வளர மனமும் கூடவே வளரவேண்டும். அல்லாக்கால் அறிவு பயனற்றுப் போய்விடும். இனத்தாலும் குலத்தாலும் பிறப்பாலும் செல்வத்தாலும் ஒருவன் மட்டும் உயர்ந்தவனாகவும், ஒருவன் தாழ்ந்தவனாகவும் இருக்கக்கூடாது. எல்லாரும் ஒரே பிறவியாகக் கருதப்பட வேண்டும். எவருக்கும் தனியான உடைமையே இருக்கக் கூடாது: இவ்வுலக உருண்டையின் மண்ணும் நீரும் விளைவும் எல்லாருக்கும் பொதுவானவையாக இருக்கவேண்டும். எல்லாரும் உழைக்க வேண்டும். ஒருவன் உழைக்கவும், ஒருவன் உழைக்காது உண்ணவும் உள்ள குள்ளநிலையைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். சாதி, குலம் பேசுபவர்களை மக்களினத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். தாழ்வு, உயர்வு சொல்பவனைத் தூக்கிக் கடலில் வீசவேண்டும். அவனால் இந்த உலகத்திற்கு எத்தனைக் கேடுகள்? பயிர்கள் வளரக் களைகளை அழித்துத்தானே ஆகவேண்டும். தம்பி! பொதுமை உணர்வு என்று உன் உள்ளத்தில் தோன்றுகின்றதோ அன்றே நீ முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்கின்றாய் என்றுபொருள். மற்றப்படி பொறிகளும் கட்டடங்களும் ஊர்திகளும் உடைகளும் உன் முன்னேற்றங்கள் ஆகா!

-பெருஞ்சித்திரன்.

# கழுதை அழுத கதை.

-துரை-மாணிக்கம்-

பெண்கழுதை இவ்வாறு
பேசியதைக் கேட்டவுடன்,
கண்களிலே நீர்துளும்பக்
காளை மிகவருந்தி,
''அம்மாவோ உன்தூய்மை
அன்பை உணராமல்
சும்மாஓர் பேச்சுக்குச்
சொல்லிவிட்டேன்; நீபொறுப்பாய்!
உன்றன் கணவன்மேல்
உண்மையன்பு கொண்டதனால்
என்றன் கருத்துனக்கோ
எட்டிக் கசப்பாகும்!
பெண்குலத்தில் உன்றன்
பெருமை தனிப்பெருமை!
மண்ணுலகில் இன்றைக்கும்
மாண்பு மடியவில்லை.
அப்பேச்சை விட்டுவிடு;
ஆனாலும் ஒன்றுரைப்பேன்.
தப்போ? சரியோ?
தவறிழைக்க நான்விரும்பேன்.

மாந்தரிடம் நாம்வாழ்ந்து
மாளாத் துயருற்றோம்!
சாந்துணையும் துன்பந்தான்.
சள்ளை ஒழியாது!

மக்களென்பார் தங்களையே
மாய்த்துவிடும் காலமிது!
ஒக்க அவரினத்துள்
ஒற்றுமைக்கு வாய்ப்பில்லை.
கோடிக் குலம்பகுப்பார்;
கோடி மதம்வகுப்பார்;

வாடி வருந்துவர்க்கோர்
வாய்க்குணவு தாம்கொடுக்கார்.
ஏழையென்றும் செல்வரென்றும்
ஏற்றத்தாழ் வுற்றிடுவார்;
வாழையடி வாழையென
வாட்டமுறும் ஓர்கூட்டம்!
அக்கூட்டம் தன்னை
அடிமைசெய்யும் ஓர்கூட்டம்!
மிக்க துயரிழைக்கும்!
மீளத் தடைவிதிக்கும்!
ஓலைக் குடிசையிலே
ஓர்கூட்டம் வாழ்ந்துவரும்!
மேலைக் குடியென்பார்
மேல்மாடி வாழ்வுசெய்வார்.
உப்புக் கலைவார்
ஒருவர்; பிறிதொருவர்
தொப்பை வருந்தத்
துருப்பார் கனிவகைகள்!
கந்தை அணிவார்
ஒருவர் பிறிதொருவர்
செந்தாழம் பட்டைச்
சிறப்பில்லை என்றெறிவார்!
நோயால் வருந்தும்
ஒருகூட்டம்; வேறொன்றோ
ஓயாமல் உண்டு
செரிக்க மருந்துண்ணும்!
கொட்டுமழை வெய்யில்
குளிரில்வாழ் வார்ஒருவர்;
பட்டுத் தலையணையில்
பாதம்வைப் பார்ஒருவர்!
கோயிலென்றும் தெய்வமென்றும்
கோடிக் கதைபடிப்பார்;
வாயிலொன்றும் நெஞ்சிலொன்றும்
வாழ்க்கை நடத்திடுவார்!
'பார்ப்பார்'என் றோரினத்தைப்
பார்த்திருக்க மாட்டாய்நீ!
ஊர்ப்பால் வருந்துயரம்
எல்லாம் அவரால்தான்!

நெற்றி நிறையவெண்
நீறணிவார்; உச்சியிலே
கற்றைக் குடுமிமயிர்
காற்றில் சிலிர்சிலிர்க்கும்!
பூணூல் அணிவார்;
'புரோகிதங்கள்' செய்திடுவார்;
காணாக் கடவுளுக்கே
'காவலர்யாம்' என்றுரைப்பார்!
தெய்வப் பிறவியென்பார்;
தீண்டிவிட்டால் தீட்டென்பார்;
பொய்புளுகு மூட்டைப்
'புராணங்கள்' பாடிடுவார்.
'சாத்திரங்கள்' பேசிடுவார்;
'சாதி' குலம்வகுத்தார்;
நாத்திறத்தால் ஏய்ப்பார்;
நடிப்பால் பிழைத்திடுவார்!
அன்னவரின் பேச்சில்
அறவே மயங்கியவர்
மன்னவரானாலும்
மதியிழந்தே போவார்கள்.
மொத்தத்தில் மக்களெனும்
மூட இனத்தினுக்கு
மெத்த பெருமையில்லை!
மேற்பிறவி என்பதும்பொய்!

நற்கழுதை அம்மையே!
நானுரைப்ப தெல்லாமும்
கற்காலச் செய்தியில்லை;
கண்களினால் காண்பனவாம்!
இன்னுங்கேள்...'' என்றுரைத்த
ஏற்றை இடைமறித்து,
"முன்னே ஒரு கூட்டம்
ஏதோ முழங்குவதைப்
பாருங்கள்'' என்று
கழுதை பதைபதைக்க,
"வாருங்கள் இப்பால்
ஒளிந்து, வருங்கூட்டம்
செய்வதென்ன என்றறிவோம்''
என்றே செழுங்காளை
மொய்ம்புதரைக் காட்டியது!
மூன்றும் முடங்கினவே!

-தொடரும்.




# கிளி.

மு. வை. அரவிந்தன்

பச்சை வண்ணக் கிளியைப்பார்!
பவழ வாயின் அழகைப்பார்!
கொச்சை மொழியில் இன்பமுடன்
கொஞ்சிப் பேசும் பேச்சைக்கேள்!

கொய்யாப் பழமும் தினைக்கதிரும்
கொண்டு வந்து தின்றுவிட்டு,
தென்னங் கீற்றில் போய் அமரும்!
தென்றல் வந்து தாலாட்டும்!
நீல வானத் தெருவினிலே
நீந்தி மகிழ்ந்து விளையாடும்!

# பிண ஊர்வலம்.

சி. சத்தியமூர்த்தி.

ஈ ஒன்று இறந்தது;
எல்லா ஈயும் பறந்தது;
எறும்பு ஒன்று கண்டது;
இனத்தைக் கூட்டி வந்தது.

எறும்பு பல சேர்ந்து
இறந்த ஈயைச் சுமந்து
புதைக்கும் எண்ணத்தோடு
பொந்தை நோக்கிப் போகும்.

ஒன்றன் பின்னர் ஒன்ருய்
ஒழுங்காய்ச் செல்லும் அழகாய்;
எறும்பின் அமைதி ஊர்வலம்
ஈக்கு இறுதி ஊர்வலம்.




-சு. ச. மாறன்-

ஓர் ஊரில் ஓர் ஆன்றவிந்த முனிவர் இருந்தார். அவர் தம் ஐம்புலன்களையும் அடக்கி, ''அடக்கம் அமரருள் உய்க்கும்'' என்பதற் கிணங்க வாழ்ந்து வந்தார். அவர் தாம் தம் நுண்ணறிவால் நுனித் தறிந்தவற்றை மக்களிடையே பரப்பி அவ்வூர்மக்களை மாண்புடைய வர்களாக்கி வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி செய்தார்.

அத்தகுசான்றாண்மையாளர், ஒருநாள் தம்முடைய மாணவர் களோடு அமர்ந்து உரையாடி யிருக்குங்காலை, அவருடைய நல்லுரை யைச் செவிமடுக்காத சில புல்லிய மாந்தர் அவரை அணுகிப் பொரு ளற்ற வினாக்களை வினவி அவர் மனம் புண்படும்படி இழிமொழிகள் கூறினர். ஆயின் தம்மாணாக்கர்களைக்கூட அக் கீழ்மக்களின் செய லையும், ஏச்சுகளையும் தடுக்க ஏவாது அமைதியோடிருந்தார். அவ்வன் னெஞ்சர் தம் வாய் வலிக்கக் கத்திவிட்டு, அப்பெரியார் ஏதும் மறு மொழி கூறாது புன்னகையோடிருந்ததால் தாமே அவ்விடத்தினின் றும் அகன்றனர். அவர்கள் அகன்ற பின்னர் அங்கிருந்த மாணவர் கள், ''ஐயா, தாங்கள் ஏன் இக்கீழ் மக்கள் மீது முனியாது, எங்களை யும் அமைதிபொடு இருக்கச் செய்தீர்கள்? இவர்கள் தங்களை இவ்வா றெல்லாம் இழித்துரைப்பது தங்களுக்குச் சினத்தை யளிக்கவில்லையா? என்றனர்.

ஆயின் முனிவரோ அவ்வினாக்களுக்கு நேரிடையாக விடை கூறாது, ''நீங்கள் எனக்கு ஏதானும் அன்பளிப்பு நல்கினால் நான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை யெனின் ,யாரைச் சாரும்'' என்றார்.''

மாணவர்கள், ''ஐயமின்றி அவைஎங்களையேசாரும்'' என்றனர். இதுகேட்டு அவ்வறிவனும், ''நான் இம்மாந்தர்களின் இழிமொழிகளை யும் ஏற்றுக்கொள்ள வில்லையே! பின்னர் அவ்விழிமொழிகள் என்னை எப்படிச் சாரும்?'' என்றார்.

செந்தமிழ்ச் சிட்டுகளே!

நீங்களும் அவ்வாறே உங்களை யாரேனும் இழிமொழி கூறி ஏசி னால் செவிமடுக்காது உங்கள் செயலை ஒழுங்குடன் செய்ய வேண்டும். பின்னர் நாளடைவில் உங்களைத் திட்டியவர்களும்கூட உங்கள் பண் பால் கவரப்படுவர். எனவே எந்நிலையிலும் உங்கள் மேலான பண்பி னின்று வழுவி யாரிடமும் இழிமொழி கூறுவதோ அன்றிச் சினங் கொள்ளுவதோ தவறு

''காக்க சினத்தை அடக்கத்தால்!'' என்பது மூதுரையாகும்.



# அறிஞர் அண்ணா!

பாவை-நடவரசன்.

ஒரு நாட்டின் பெருமை, அந்த நாட்டில் ஓடிவரும் ஆற்றாலோ, அழகுயர் மாடமாளிகையாலோ, உயர்ந்தோங்கிய மலையாலோ மட்டும் கிடைப்பது அன்று. அந்த நாட்டில் பிறந்த அறிஞர்களாலும் ஆட்சித் தலைவர்களாலும் கிடைப்பதாகும். அவர்கள்தாம் அந்த நாட்டின் உயிர்நாடி; நாகரிகத்தின் வித்து.

காவிரி, தென்பெண்ணை, வைகை போன்ற பல ஆறுகள் ஓடுவதால்தான் தமிழ்நாட்டிற்குப் பெருமையா? இல்லை. கொல்லிமலை, முல்லைக்குத் தேர்கொடுத்த பாரியின் பறம்புமலை, அவ்வைக்கு நெல்லிக் கனிகொடுத்த அதிகனின் பொதினிமலை போன்ற மலைகளால் பெருமையா? இல்லை. திருவள்ளுவர் பிறந்து திருக்குறளை இயற்றியதால் பெருமை! மாணிக்கவாசகர் தோன்றித்திருவாசகம் அருளியதால் பெருமை! தொல்காப்பியரும் இளங்கோவும் போன்ற புலனழுக்கற்ற புலவர் பெருமக்கள் தோன்றி இலக்கண இலக்கியம் படைத்ததால் பெருமை! இன்று, அறிஞர் அண்ணா நல்லாட்சி நடத்தித் 'தமிழ்நாடு' என்னும் பெயர் வாங்கித் தந்ததால் பெருமை! 'தமிழ்நாடு' என்னும் சொல், நாடு இருக்கின்றவரையில் அறிஞர் அண்ணாவும் இருப்பார்.

அண்ணா, பிறக்கின்ற பொழுதே அறிஞராகப் பிறக்கவில்லை பிறக்கின்ற பிள்ளைகள் எல்லாரையும் போலவே பிறந்தார். ஆனால். வளர்கின்ற பொழுது-வகுப்பிற்குச் சென்று பாடம் படிக்கின்ற பொழுது தனிப் பிள்ளையாக விளங்கினார். தமிழ்ப் பிள்ளையாக விளங்கினார்.

பள்ளிப் படிப்பைத் தாம்பிறந்த ஊராகிய காஞ்சிபுரத்திலேயே படித்து முடித்தார். பின்னர், பட்டப் படிப்பைச் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து படித்தார். படிக்கின்ற காலத்தில் பாடத்தில் கருத்தை ஊன்றிப் படித்தார். அதனால், மலர் கொய்துவரச் சோலைக்குச் சென்ற மங்கை, அதனைக் கொய்துகொண்டு வருவது போல், கல்லூரியிலிருந்து முதுகலை(M.A.) பட்டம் பெற்றுக்கொண்டு வெளிவந்தார். ஆசிரியர் பணியில் அமர்ந்தார். பொதுநலத்தில் அவருள்ளம் புகுந்ததனால், ஆசிரியர் துறையைவிட்டு, அரசியல் துறைக்கு அடியெடுத்து வைத்தார்.

தன்மான (சுயமரியாதை) இயக்கத்திலும் ஒப்புரவுக்கட்சியிலும் (Justice Party) ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டார். பின்னர், ஒப்புரவுக்கட்சி நடத்திவந்த 'ஒப்புரவு' (Justice) இதழுக்குச் சில காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அப்பொழுது அவரின் இணையற்ற நாநலத்தையும் நல்ல எழுத்தாற்றலினையும் கண்ட தந்தை பெரியார் அவர்கள், திராவிடர் கழகத்திற்கு அண்ணாவை அழைத்தார். அக்கழகத்திற்கு வந்த அண்ணா அவர்கள், கழகப் பொதுச் செயலாளராகவும், 'விடுதலை' இதழின் ஆசிரியராகவும் ஆனார்,

கல்லூரியிலிருந்து அவர் கற்றதைவிட, தந்தை பெரியாரிடம் இருந்தபொழுது அவர் கற்றதுதான், அவரின் அறிவுக் கண்ணைத் திறக்கச் செய்தது; பகுத்தறிவுப் பாதைக்கு வரச் செய்தது. அறிவுக்கு உணவைத் தந்தை பெரியாரிடம் பெற்ற அண்ணா அவர்கள், பகுத்தறிவுப் பணிபுரிய-பைந்தமிழர் விடுதலை அடையப் புடைத்தெழுந்தார். தடைநூறு வந்தாலும் தமிழர் பழைய நடைபோட வேண்டுமெனத் தந்தையோடு நடைபோட்டார். ஆரியர் சூழ்ச்சி எல்லாம் அம்பலத்தில் இழுத்துப்போட்டு, அவர்கள்செய்தகொடுமையினை விளக்கிக்காட்டி, "அருந்தமிழா! அடிமை, உனக்கா? ஆர்த்தெழுக! ஆரியச் சூழ்ச்சியை வெல்ல வருக! அவர்கள் ஆட்சியை ஒழித்து நீ ஆட்சி புரிய வரவேண்டும்" எனத் தமிழர்களைத் தட்டி எழுப்பினார்; தன்மான உணர்வினை ஊட்டினார். நல்ல கொல்லிமலைத் தேனில் நஞ்சுவைத்துக் கொடுப்பதுபோல், இனிக்கின்ற தமிழ்மொழியில் ஆரியரின் தீய கருத்துகளைப் படைத்திருக்கும் இலக்கியங்களில் எல்லாம் 'தீ பரவட்டும்' எனக் கனல் கக்கினார்; 'ஆரியமாயை' எனத் தெளிவாக விளக்கினார். அன்று, இராசாசி அமைச்சரவையில் கொண்டுவந்த இந்திமொழித் திட்டத்தை மடிகட்டி எதிர்த்தார். இப்படித் தந்தை பெரியாருடன் கருத்துக் களங்கண்ட அண்ணா பிறகு தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அவரிடமிருந்து பிரிந்தார். பெரியாரைவிட்டு அண்ணா பிரிந்தார் என்றாலும் அவர்மேல் வைத்த மதிப்பு குறையவில்லை; அன்பும் குன்றவில்லை. பிரிந்து வந்ததும் திராவிட முன்னேற்றக் கழகத்தை (தி. மு. க.) அமைத்தார்.

தம் கழகத்துக் கொள்கையினைப் பரப்புவதற்காகத் தாமே 'திராவிடநாடு' என்ற இதழைத் தொடங்கினார். அதற்குப் பின்னர், 'மன்றம்' மலர்ந்தது; 'முரசொலி' முழங்கியது. தமிழகம் எங்கும் தி,மு.க. என்னும் பெயர் விளங்கிற்று. 1952—53-ஆம் ஆண்டுகளில் இரா

சாசி அமைச்சரவை கொண்டுவந்த ஒரு நேரக் கல்வித்திட்டத்தை அக்கழகமும் எதிர்த்தது. திருச்சியிலிருக்கும் தால்மியாபுரத்துக்கு அதன் பழைய பெயராகிய 'கல்லக்குடி' என்னும் பெயரினையே வைக்க வேண்டுமெனப் போராட்டம் நடத்தியது. அதனால், அண்ணா அவர்கள் மூன்றுமாதச் சிறைத்தண்டனை பெற்றார். இப்படி, அவர் அரசியல் வாழ்வில் ஏழுமுறை சிறைக்குச் சென்றிருக்கின்றார்.

1957-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், 1962-ஆம் ஆண்டுத்தேர்தலில் தோற்றார். என்றாலும், அவர்கட்சிதமிழ்நாட்டில் ஐம்பது இடங்களைப்பெற்று எதிர்க்கட்சியில் அமர்ந்தது. பிரிவினை இயக்கங்களைத் தடைசெய்யப் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேறிய பொழுது, அண்ணா அவர்கள் தாம் கொண்டிருந்த திராவிட நாட்டுக் கொள்கையைக் கைவிட்டார்; ஆனாலும், தமிழ்நாட்டைக் கைவிட வில்லை. வடபுலத்தில் சீனன் படையெடுத்த பொழுதும், நாட்டின் நலங்கருதித் தம் கட்சியினை மற்றக் கட்சியுடன் இணைந்து பணிபுரிய முழுதும் ஈடுபடுத்தினார்.

1967-ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அவரதுகட்சி (தி.மு.க.) 138 இடங்களைப் பிடித்து, ஆட்சிக்கு வந்தது. அண்ணா அவர்கள், முதலமைச்சராக ஆனார்கள். ஒரு கட்சி தோன்றி 18-ஆண்டுகளில் ஆட்சியைப் பிடித்தது, இதுதான் வரலாற்றில் முதன்முறையாகும். ஆட்சிக்கு வந்த அண்ணா அவர்கள், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்னும் பெயரினைச் சூட்டினார். கலப்புத் திருமணத்தைச் சட்டமாக்கினார்; இருமொழித் திட்டத்தை நிறைவேற்றினார். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார். இப்படி, அவர் புகழேணியில் ஏறும்பொழுது, அவருக்குப் புற்றுநோய் வளர்ந்தது. அதனைக் குணப்படுத்த அமெரிக்காவிற்குச் சென்றார்; குணமாகியும் வந்தார். ஆனால், அக்கொடுநோய் அவரை 1969-ஆம் ஆண்டுப் பிப்ரவரித் திங்கள் இரவு 12-22 மணிக்கு வென்றுவிட்டது. தந்தை பெரியார் சொல்லியதுபோல் "நடவாதது, நடக்கக் கூடாதது நடந்துவிட்டது". பால் நினைந்தூட்டும் தாயை இழந்த குழந்தையைப் போல் தமிழ்நாடே அழுதது. எதையும் தாங்கும் நெஞ்சம் இதைத் தாங்க முடியாமல் கண்ணீர் பெருக்கிற்று.

எளிய தோற்றம், இனிய சொல்லாற்றல் எழுத்தாற்றல்-அத்தனையும் உருவான அண்ணாவைப் பெர்னாட்சா என்றார்கள்; இங்கர்சால் என்றார்கள்; இணையற்ற எழுத்தாளர் என்றார்கள். ஆனால், அவர் அனைவருக்கும் அன்புகாட்டிய அறிவுள்ள அண்ணன். ஆம் அறிஞர் அண்ணா ஆகும். தமிழ்ச்சிட்டே! வாழ்நாள் எல்லாம் பிறரை வையாத நாவுடைய அண்ணாவின் அரவணைக்கும் பண்பினைக் கைக்கொள். தமிழ்நாட்டையும் மொழியையும் காக்க உறுதிகொள். O

# உலகிலேயே ......!

தொகுப்பு: 'கதிரொளி'

- மிகப்பெரிய பல்லி 'கொமொடாபிராகன்'. நீளம் 10 அடி கொமொடோ தீவில் உள்ளது.
- மிகவும் விரைவாக வளரும் மரம் 'யூகாலிப்டசு சலிக்கஞ'. நடு ஆப்பிரிக்காவில் உள்ளது.
- பின்புறமாகப் பறக்கும் பறவை 'முணுமுணுப்புப்பறவை கியூபாவில் உள்ளது.
- மிகச்சிறிய முதுகெலும்புள்ள உயிரி 'பண்டகா பிச்மா (மீன்) "நீளம் 3". இருப்பிடம் பிலிப்பைன்சு தீவு.
- மிகப் பெரிய முட்டை 'ஆத்திரிக் தீக்கோழி'யின் முட்டை. நீளம் 6'-7' விட்டம் 4'-6'.
- மிக நீளமான காழப் (பவளப்) பாறைத் திட்டுகள் உள்ள இடம் 'ஆத்திரேலியா' 1250 கற்கள்.
- மிகுதியாக இறைச்சி உண்பவர்கள் 'உருகுவே' நாட்டார்.
- மிகுதியாகப் பால்பருகுவோர் 'கொலம்பியா' நாட்டார்.
- மிகுதியாகச் சருக்கரையை உணவில் சேர்த்துக் கொள்பவர்கள் 'ஐசுலாந்து' நாட்டார்.
- மிகுதியாகப் புகை பிடிப்போர் 'இங்கிலாந்து' நாட்டார்.
- மிகுதியாகப் பேருந்துகள் செய்யப்படும் இடம் 'டெட்ராய்டு, மிச்சிகன்' அமெரிக்க ஒன்றிய நாடுகளில் உள்ளது.
- மிகவும் உயரமான இடத்தில் இருக்கும் தலைநகர் 'லாமா பொலிவியா'. உயரம் 11900 அடி.
- மிகப் பழமையான கால முதல் மக்கள் வாழும் தீவுகள் 'எசசாம் டமாசு'. சிரியாவின் தலைநகர்.
- மிகவும் தன்னந்தனியாக மக்கள் வாழும் தீவுகள் 'திரிசுடன்' 'டாகுகா'.
- மிகப்பெரிய சமயம் 'கிறித்துவ சமயம்'
- முதலிடம் பெறுகின்ற நூல் 'கிறித்துவ மறை நூல்' (Bible)

# பயன்மொழிகள்.

தொகுப்பு:சி. தமிழ்வென்றி, பேட்டை, நெல்லை-௬.

0 எவ்வளவு பழமையான (புனிதமான) தூய்மையானதாகக் கருதப்படும் கொள்கையானுல்தான் என்ன? அதனை ஒவ்வொரு மாந்தனும் தன் உள்ளம் எனும் ஆய்வுக்கூடத்தில், பகுத்தறிவு என்ற உரைகல்லில், தானே, தனக்காகவே ஆய்ந்து பார்த்து,-உரைத்துப் பார்த்துத்தான், அதன் பின்னரும் அஃது உண்மையென்று தோன்றினுல்தான் ஒப்புக்கொள்ள வேண்டும். –இங்கர்சால்.

0 எண்ணித் துணிகிறேன்; அதனுல் நான் வாழ்கிறேன்! –டெசுகார்டசு.

0 வையக மக்களெல்லாரும்–நலம்வாய்ந்திட எண்ணுவோனே அறிவாளி! –பாரதிதாசனுர்.

0 மதம்மக்களை மயக்கும் "அபின்" –காரல்மார்க்சு.

0 எத்துணை முயற்சிகள் மேற்கொள்ளப்படினும், சாதிவெறியை ஊட்டும் சாத்திரங்களைத் தூய்மையானவை(புனிதமானவை) என்று கருதும் நம்பிக்கை ஒழிந்தால்தான் "சாதி" ஒழியும். –பர். அம்பேத்கார்.

0 உணர்ச்சிமயமானவர்களுக்கோ இவ்வுலகம் ஒரு துயர ஓவியம்; எண்ணித் துணிபவர்க்கோ அஃதோர் இன்பமாளிகை! –வால்புபோல்.

0 தேனைத் தருகிறது என்பதற்காகத் தேனீயை அணைத்துக் கொள்ள முயலாதீர்கள். –தென்னுட்டுப்பழமொழி.

0 இழந்த மானமும், மொழிந்த சொல்லும் ஒரு நிமையத்தில் நடந்தவையே யெனினும் ஓராயிரமாண்டானுலும் திரும்பப் பெறமுடியாதவை. –இத்தாலியப் பழமொழி.

0 தோல்விகளுக்கு அஞ்சாதே! தொல்லைகளால் திட்பமுறு. –சேம்சு ஆலன்.

0 உண்மைகளனைத்தையும் நீங்கள் பேசவேண்டுமென்பதில்லை; நீங்கள் பேசுபவையனைத்தும் உண்மையாக விருந்தால் போதும்! –கென்னடி.

0 மன்னிப்பு என் அன்னை; பொறுமை என்மகள்; அறிவு என் வேலைக்காரி! –குரு நானக்.

0 முறையாகத் திட்டமிட்டுத் தன் இனத்தையே வேட்டையாடும் ஒரே இனம் மாந்த இனமே! –வில்லியம் சேம்சு.

0 மற்றவர்களுக்கு உரிமை வழங்க விரும்பாதவர்கள் தாங்கள் உரிமையுடன் வாழத் தகுதியற்றவர்கள். அப்படியே அவர்கள் உரிமையோடு வாழ்ந்தாலும், அவ்வுரிமை நெடுநாள் நிலைக்காது. –ஆபிரகாம் இலிங்கன்.

# கோள்களைப் பற்றி!

சி. தமிழ்வெற்றி. (அறி. இ.)

(க) நிலவிலிருந்து விண்வெளியைப் பார்த்தால் எப்பொழுதும் அது கருப்பாகவே தெரியும். ஏனெனில், அங்குக் காற்று மண்டிலம் இல்லை. சூரிய ஒளி காற்று மண்டிலம் வழியாக ஊடுருவி வருவதால்தான் நிலத்திலிருந்து பார்க்கும் பொழுது விண்வெளி நீல நிறமாகத் தோன்றுகிறது.

(உ) சூரியனுக்கு ஏறத்தாழ 600 கோடி அகவைகள் முடிந்து விட்டதாகவும், இஃது அதன் வாழ்நாளில் பாதிக்குமேல் இருக்குமென்றும் அறிவியலாரால் கருதப்படுகின்றது.

(ங) நிலவில் ஏராளமான மலைகளும் கணவாய்களும் உள்ளன. மலைகளில் 20,000 அடி உயரத்திற்குமேல் உள்ளவை ஆயிரத்திற்கும் மிகுதியாக உள்ளன.

(ச) ஒரு சிறிய வீட்டின் கூரையில் ஒருநாளைக்கு விழும் சூரிய வெப்பம் ஏறத்தாழ 200 கல்லெடை (Ton) நிலக்கரியால் ஏற்படும் வெப்பத்திற்கோ, அல்லது 8 குடுவை கல்நெய்யால் (பெட்ரோல்) ஏற்படும் வெப்பத்திற்கோ நிகராகும் என்று கருதப்படுகிறது. இவ் வெப்பத்தால் மின்சாரம் உண்டுபண்ணலாம்.

(ரு) கோள்களில் மிகப்பெரியது வியாழன். காரி (சனி) என்ற கோளுக்கு மட்டுமே சுற்றியுள்ள வளையம் உண்டு. காரியை(சனியை) நாம் கரிசு உடைய கோள் என்று கருதுவதைப் போலவே மேனாட்டாரும் கருதுகின்றார்கள். காரி விண்வெளியை ஒருமுறை சுற்றி வர 30 ஆண்டுக்காலமாகிறது.

சா) பகற்பொழுதில் விண்ணை நோக்கினால் நாம் சூரியனைப் பார்க்கிறோமில்லையா? ஆயின், உண்மையில் நாம் சூரியனைப் பார்க்கவில்லை. சூரியன் இருந்த இடத்தைத்தான் பார்க்கிறோம். சூரியன் நிலத்திலிருந்து 9,20,00,000 கல் தொலைவில் உள்ளது. அதன் ஒளிக்கதிர்கள் நிலத்தை வந்தடைய எட்டு நிமையங்களும், முப்பத்தெட்டுநொடிகளும் பிடிக்கின்றன. இதற்குள் சூரியன்தான் இருந்த இடத்தினின்றும் (8,64,000)கற்கள் தன் குறுக்களவைப்போல் இரண்டு மடங்குத் தொலைவு போய் விடுகிறது.

(எ) அறிவன் (புதன்) கோளில் எப்பொழுதும் ஒரு பகுதி குளிர்ச்சியாகவே யிருக்கும். சூரியனை நோக்கியிருக்கும் பகுதி தாங்க

வியலா வெம்மையுடையதாக விருக்கும்.

(அ) ஒரு காலத்தில் நிலவு இப்பொழுது இருப்பதைவிட நிலத்துக்கு மிக அருகில் இருந்தது. மீண்டும் அதுபோல் நெருங்கி வரும் என்று கூறப்படுகிறது.

(சு) இந்த நிலவுலகு முழுதிலும் ஓராண்டுக் காலத்தில் அனைத்து வேலைகளிலும் செலவிடப்படும் அனைத்துப் பொறிகளின் ஆற்றலையும் திரட்டினால் அவ்வாற்றல் சூரியனிடமிருந்து மூன்று நிமைய நேரத்தில் உலகுக்கு வரும் ஆற்றலுக்கே நிகராகும்.

(கo) சூரியனைவிட 8000 மடங்கு ஒளியுடையது "ஈகிள்" என்ற கோள். இதை (கி. பி. 1945) தி. பி. ககளசு-இல் கண்டுபிடித்தனர்.

# நாடுகளும் தலைநகர்களும்

| நாடு | தலைநகர் | நாடு | தலைநகர் |
|---|---|---|---|
| துருக்கி | அங்கோரா | இசுரேல் | செருசலேம் |
| ஈரான் | டெஃரான் | ஈராக்கு | பாக்தாத்து |
| பர்மா | இரங்கூன் | தாய்லாந்து | பாங்காக்கு |
| வடவியட்னும் | கானுய் | தென்வியட்னும் | சைகோன் |
| இலாவோசு | வியன்டியன் | கம்போடியா | நாம்பென் |
| இந்தோனேசியா | சாகர்த்தா | தென்கொரியா | சியோல் |
| வடகொரியா | பையாங்யாங் | | |
| சப்பான் | டோக்கியோ<br>கியோடா (பழைய தலைநகர்) | | |
| பிலிப்பைன்சு | குயூகான்<br>மணிலா (பழைய தலைநகர்) | | |
| நார்வே | ஆசுலோ | டென்மார்க்கு | கோபன்கேகன் |
| ஆலந்து | திகேக்கு | பெல்சியம் | பிரசெல்சு |
| பிரான்சு | பாரிசு | இங்கிலாந்து | இலண்டன் |
| சுவிட்சர்லாந்து | பெர்ன் | கிழக்குசெர்மனி | பெர்லின் |
| போலந்து | வார்சா | பல்கேரியா | சோபையா |
| யூகோசுலேவியா | பெல்கிரேடு | | |
| செக்கோசு-லோவேகியா | பிரேகு | சோவியத்துஇரசியா | மாசுகோ |
| இத்தாலி | உரோம் | கிரீசு | ஏதென்சு |
| அமெரிக்கா | வாசிங்டன் | சாவா | படேவியா |
| மேற்குபர்மா | மாண்டலே | மணிடோபா | வின்னிபெக்கு |

(தொகுப்பு: சி. துரைமாணிக்கம், வடகாடு.)




சென்றமாதப் புதிர்களின் விடைகள்.

புதிர்-1.

குதிரைக் கொட்டடியில் முதல்நாள் கட்டப்பட்ட மொத்தக் குதிரைகள் 32.

| குதிரைகள் முதல்முறை கட்டப்பட்ட வகை | 2-ஆம் முறை | 3-ஆம் முறை |
|---|---|---|
| 4 \| 4 \| 4 | 3 \| 6 \| 3 | 5 \| 2 \| 5 |
| 4 \|   \| 4 | 6 \|   \| 6 | 2 \|   \| 2 |
| 4 \| 4 \| 4 | 3 \| 6 \| 3 | 5 \| 2 \| 5 |
| மொத்தம் 32. | மொத்தம் 36. | மொத்தம் 28. |

புதிர்: 2. 50 கற்கள்.

இம்மாதப் புதிர்:

பாண்டியன் தன்வீட்டில் நடந்த திருமணத்திற்குக் காய்கறி வாங்கச் சென்னி என்பவனிடம் உருபா 200 கொடுத்து வெளியூர் அனுப்பினர். சென்னி பக்கத்தூருக்குப் போய்க் கத்தரிக்காய், முட்டைக்கோசு, உருளைக்கிழங்கு, பூசணிக்காய் ஆகியவற்றை வகைக்கு ஒவ்வொரு மூட்டை வாங்கி வந்தான்; பாண்டியன் சென்னியைக் கூப்பிட்டுக் 'கத்தரிக்காய் விலை என்ன?' என்றுகேட்டார். சென்னி, 'அது முட்டைக்கோசைவிட 2 உருபா குறைவு' என்றான். பின் 'கோசு விலை என்ன' என்று கேட்டார். அவன், "அஃது உருளைக்கிழங்கைவிட ஓர் உருபா மிகுதி" என்றான். பிறகு பூசணிக்காய் விலையைக் கேட்க, "அது கத்தரிக்காயின் விலையில் கால்விலை" என்றான். "சரி, மீதி இரண்டு உருபா எங்கே?" என்று பாண்டியன் கேட்க, "அத்தொகை உந்துக் கட்டணத்திற்குச் சரியாகப்போய்விட்ட"தென்று கூறினான். சென்னி ஒவ்வொரு காய்கறியையும் என்னென்ன விலைக்கு வாங்கினான்?

இப்புதிரை விடுத்தவர்:

செல்வநம்பி, 19, முதலாவது நகக்கட்டிடத் தெரு, அரக்கோணம்.

விடை: அடுத்த இதழில்.

# சமசுகிருதத்தில் தமிழ்ச்சொற்கள்-3

| தமிழ் | சமசு(வ.மொ) |
|---|---|
| காண் | ஜ்ஞா |
| காண்டம் | காண்ட |
| காந்தி | காந்தி |
| காமம் | காம |
| காய் | காச் |
| காயம்(கருமை வர்னம்) | ஆகாச |
| காசா(எருமை) | காசர |
| காரம் | க்ஷார |
| காரிகை(நீர், பெண், அழகு) | காரிகா |
| காலம் | கால |
| காலன் | கால |
| காவிரி | காவேரி |
| காளம்(கருமை) | கால |
| காளம்(பெரு மகிழ்ச்சி) | காஹல |
| காளகம்(எருமை) | காலக |
| காளி(கரியவள்) | காலீ |
| கானம் | கானன |
| கிண்கிணி | கிங்கிணி |
| கிட்டம்(கட்டி, துரு) | கிட்ட |
| கிழம் | ஜரஸ் |
| குக்கல்(குள்ள நாய்) | குக்குர |
| குகை | குஹா(g,h) |
| குத்து | குச்ச(g) |
| குச்சு | கூர்ச்ச |
| கும்பம் | கும்ப |
| குமுதம் | குமுத |

| தமிழ். | சமசு(வ.மொ) |
|---|---|
| குட்டம் | குஷ்ட |
| குடங்கர் | குடங்கக |
| குடம் (நீர்க் குடம்) | குட (t) |
| குடம் (வெல்ல உருண்டை) | குட(g) |
| குடல் | குத(g) |
| குடி(வளைவு) | குடி(t) |
| குடி(இல்) | குடி(t) |
| குடி(உண்) | குட்(d) |
| குடிகை | குடிகா(t) |
| குடில் | குடீர |
| குடிலம்(வளைவு) | குடில(t) |
| குடிலை(ஓங்கா ரம்) | குடிலா(t) |
| குடும்பம் | குடும்ப |
| குண்டம்(குழி) | குண்ட |
| குண்டலம் | குண்டல |
| குண்டலி | குண்டலின் |
| குண்டிகை(துற வியின்நீர்க்கலம்) | குண்டிகா |
| குணம் | குண(g) |
| குத்து | குட்(tt) |
| குத்து(உட்கார்) | சத்(n) |
| குதி | கூர்த் |
| குந்தம் | குந்த(nt) |
| குந்தாலம் | குத்தாலம் |
| குப்பாயம்(கவ சம்) | கூர்பாஸ் |
| குமரன் | குமார |
| கூழை | கூல |

| தமிழ் | சமசு[வ.மொ] | தமிழ் | சமசு[வ.மொ] |
|---|---|---|---|
| குயில் | கோகில | கேது | கேது |
| குரு(ஒளி) | குருத்(dh) | கைதை (தாழை) | கைதக |
| குரு(குரவன், ஆசிரியன்) | குரு(g) | கொக்கு(ஓநாய்) | கோக்க |
| குரவன் | குரவஹ்(g) | கொங்கணம் | கோங்காண |
| குருந்தம் | குருவிந்த | கொஞ்சம் | கிஞ்சித் |
| குருள்(மயிர்ச் சுருள்) | குருல | கொத்தமல்லி | குஸ்தும்புரு |
| குரை(ஒலி) | குர் | கொதி | க்வத்(th) |
| குலம் | குல | கொப்பரை | கர்ப்பர |
| குவம்(ஆம்பல்) | குவ | கோ(ஆயன், அரசன்) | கோ,கௌஸ் |
| குவளை | குவல | | |
| குள்ளம் | குல்ல | கோசம் (உருண்டை) | கோச |
| குளம் | கூல | கோட்டம்(சிறை) | கோஷ்ட |
| குளம்(வெல்ல உருண்டை) | குலிக(gh) | கோட்டி(கூட்டம்) | கோஷ்டி |
| குளிர்(நண்டு) | குளீர | கோட்டை | கோட்ட |
| கூ | கு,கூ | கோடரி | குட்டார(th) |
| கூ | கூவு | கோடி[எல்லை] | கோடி(t) |
| கூகை | கூக | கோடி[கடை] | கோடி[t] |
| கூடம் | கூட[t] | கோடகம் | கோட்டக[gh] |
| கூடாரம் | குடரு[t] | கோணம் | கோண |
| கூந்தல் | குந்தல[nt] | கோபுரம் | கோபுர |
| கூம்பு | கூப | கோளகம் | கோலக |
| கூலம் | குல | கோலம் [உருண்டை] | கோல, கோலக |
| கூழ் | கூர | | |

[பாவாணரின் வடமொழி வரலாறு]

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.